# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இறப்புக்களின் பதிவு
## (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)

***2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களால் 2016, யூலை மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, யூன் மாதம் 10 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***121 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துவதுடன், சொல்லப்பட்ட சட்டவாக்கத்துக்குப் புதிய பாகம் Iஅ வைச் சேர்ப்பதன் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான முன்னுரையின் சட்டப்பயனானது, பாகம் Iஅ வின் உட்கருத்தின் விளைவாக முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமையினது நோக்கெல்லையைக் குறித்துரைப்பதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கான பொதுவான திருத்தத்தைச் செய்வதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, சொல்லப்பட்ட சட்டவாக்கத்தில் எதிர்நோக்கப்பட்ட உட்கருத்தை மேலும் செம்மையாகக் குறித்துரைப்பதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தை ஒரு விசேட ஏற்பாடாகப் பெயர் குறிப்பதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தின் வெவ்வேறு பாகங்களின் நடைமுறை தொடர்பில் வெவ்வேறு நீடிப்புத் தேதிகளை விதித்துரைப்பதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 7 :** இவ்வாசகம், (5) ஆம் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, இல்லாமைச் சான்றிதழொன்றை இல்லாதாக்குவதற்கு முன்னர் காணாமற்போன ஆளொருவர் தொடர்பில் இறப்புச் சான்றிதழொன்றை வழங்குவதனைத் தடை செய்வதாகும்.

**வாசகம் 8 :** இவ்வாசகம், 7அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன், உட்புகுத்தப்பட்ட பிரிவின் சட்டப்பயனானது, பதிவாளர் தலைமையதிபதியின் முடிபுடன் திருப்தியடையாத விண்ணப்பகாரரொருவர் தொடர்பில் மாவட்ட நீதிமன்றம் நிவாரணமளிப்பதற்கு ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 9 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 10 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய பாகம் Iஅ வை உட்புகுத்துவதுடன், வட, கிழக்கு மாகாணங்களிலான மோதல், அரசியல் அமைதிக்குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் அல்லது வலுக்கட்டாயமான காணாமற்போக்கல்கள் காரணமாக காணாமற்போன ஆட்களைப் பதிவுசெய்வதற்காகவும் காணாமற்போன ஆளின் உறவினருக்கு இல்லாமைச் சான்றிதழை வழங்குவதற்காகவும் புதிய பாகம் ஏற்பாடுசெய்கின்றது.

**வாசகம் 11 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், அட்டவணைக்குச் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 12 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை நீக்குவதுடன், பாகங்கள் I மற்றும் Iஅ என்பவற்றின் நடைமுறையின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 13 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயனானது, தவறுகளும் தண்டங்களும் தொடர்பான ஏற்பாடுகளை நீடிப்பதாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம், "அமைச்சர்" மற்றும் "உறவினர்" என்னும் சொற்களுக்காகப் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துவதாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம், புதிய படிவங்கள் 'ஆ' மற்றும் 'இ' என்பவற்றைச் சேர்ப்பதன் மூலம் முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துகின்றது. காணாமற்போன ஆளொருவரைப் பதிவுசெய்வதற்கானதும் இல்லாமைச் சான்றிதழை வழங்குவதற்கானதுமான விண்ணப்பத்தின் படிவத்தைப் படிவம் 'ஆ' குறித்துரைக்கின்றது. இல்லாமைச் சான்றிதழின் படிவத்தைப் படிவம் 'இ' குறித்துரைக்கின்றது.

## இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்)

*ச.வ.ஓ 41/2015*

### 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2010ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் விரிவுப் பெயர், ''அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வட, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதலின் விளைவாக அல்லது அதன் பின்நிகழ்வாக அல்லது அரசியல் அமைதிக்குலைவின் அல்லது குடியியல் குழப்பங்களின் அல்லது வலுக்கட்டாயமான காணாமற் போக்கல்களின் விளைவாக காணாமற் போனவர்க ளென அறிக்கையிடப்பட்ட ஆட்களை அல்லது யுத்தச்செயற்பாட் டில் காணாமற்போனவராக அடையாளங்காணப்பட்ட ஆயுதப் படை உறுப்பினர்களையும் பொலிசையும் பதிவு செய்வதற்காக ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரையைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முன்னுரை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) ''நாசகாரச் செயற்பாடுகள் குடியமைதிக்குலைவு காரணமாக'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''வட,

கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல் அல்லது அதன் பின்நிகழ்வு அல்லது அரசியல் அமைதிக் குலைவு அல்லது குடியியல் குழப்பங்கள் அல்லது வலுக்கட்டாயமான காணாமற் போக்கல்கள் காரணமாக' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) "அத்தகைய இறப்புக்களைப் பதிவு செய்வதற்கான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய இறப்புக்களையும் அத்தகைய காணாமற்போன ஆட்களையும் பதிவுசெய்வதற்கான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் துக்கான பொதுவான திருத்தங்கள்.

**4**. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்திலும் "இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தில் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் காணப்படும் இடங்களிலெல்லாம் அவற்றுக்குப் பதிலாக, "இறப்புக்களினதும் காணாமற்போன ஆட்களினதும் பதிவு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில் அல்லது வேறு ஆவணத்தில் "இறப்புக்களின் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்துக்கான" ஒவ்வொரு குறிப்பீடும் முறையே, "இறப்புக்களினதும் காணாமற்போன ஆட்களினதும் பதிவு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துக்கான" குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 1 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(2) இச்சட்டத்தின் நடைமுறைக்காலப்பகுதியின் ஏதேனும் நீடிப்பு எவ்வாறிருப்பினும், அமைச்சர், இச்சட்டத்தின் ஏதேனும் நடைமுறைக்காலப்பகுதி முடிவுறு

வதற்கு முன்னர் ஒரு மாதத்துக்குக் குறையாமல், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம், இச்சட்டத்தின் பாகங்கள் I மற்றும் Iஅ என்பவற்றின் நடைமுறைக் காலப்பகுதியை நீடிக்கலாம்:

ஆயின், -

(அ) ஏதேனும் நடைமுறைக் காலப்பகுதி, சொல்லப்பட்ட பாகங்களின் கீழான நிவாரணத்தை நாடுகின்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கையைக் கவனத்துட் கொண்டபின்னர் அத்தகைய காலப்பகுதியைப் பரிசீலனை செய்வதன்மேல் அமைச்சரினால் நீடிக்கப்படலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஏதேனும் நீடிப்பு, ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில், இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கானதாக இருத்தலாகாது.

(3) பாகங்கள் I மற்றும் Iஅ என்பவற்றின் நடைமுறைக் காலப்பகுதி முடிவுறுகின்றமை எவ்வாறிருப்பினும், பாகங்கள் II மற்றும் III என்பவற்றின் ஏற்பாடுகள் நடைமுறையில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 2ஆம் பிரிவு, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில், "அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவம் 'அ' வில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6ஆம் பிரிவு, அப்பிரிவின் (4)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(5) காணாமற்போன ஆளொருவர் தொடர்பில் 8உ என்னும் பிரிவின்கீழான இல்லாமைச் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளவிடத்து, இல்லாமைச் சான்றிதழ்

இல்லாதாக்கப்படும்வரை அதே காணாமற்போன ஆள் தொடர்பாக இறப்புச் சான்றிதழொன்று வழங்கப்படுதலாகாது.".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 7அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.*

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 7அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

*"திருப்திப்படாவிடின் மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.*

7அ. ஏழாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட பதிவாளர் தலைமையதிபதியின் முடிபுடன் அதிருப்தியடையும் விண்ணப்பகாரரொருவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய மறுப்பு அல்லது வழங்குகை பற்றிய அறிவித்தலிலிருந்து ஒருமாதத்தினுள் அத்தகைய மறுப்புக்கு அல்லது வழங்குகைக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம். மாவட்ட நீதிமன்றம், அதன் முன்னுள்ள விடயத்தை பரிசீலனை செய்த பின்னர், ஒன்றில் பதிவாளர் தலைமையதிபதியின் முடிபை உறுதிப்படுத்தலாம் அல்லது இல்லாமைச் சான்றிதழொன்றை வழங்கும்படி பதிவாளர் தலைமையதிபதியைப் பணிக்கலாம் அல்லது விடயத்துக்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு அனுமதி மறுக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் 'அ' வில்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் Iஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பாகம் Iஐ உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் (பிரிவுகள் 8அ முதல் 8ஓ வரை) இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டவாக்கத்தின் பாகம் Iஅ எனப் பயனுறுதலும் வேண்டும்:-

"பாகம் Iஅ

**வட மற்றும் கிழக்கு மாகாணங்களிலான மோதலின் விளைவாக, அரசியல் அமைதிக்குலைவின் அல்லது குடியியற் குழப்பங்களின் அல்லது வலுக்கட்டாயமான காணாமற் போக்கல்களின் விளைவாக காணாமற்போன ஆட்களைப் பதிவுசெய்தல்**

இல்லாமைச் சான்றிதழுக்கு விண்ணப்பிப்பதற்கான கட்டளைக் கற்கள்.

8அ.(1) எவரேனுமாள் காணாமற்போனவராக அறிக்கையிடப்பட்டு, அவர் இருந்திருப்பாராயின் அவரைப்பற்றி இயல்பாக கேள்விப்பட்டிருக்க வேண்டியவர்கள் ஓராண்டுக்கு மேற்பட்ட காலப் பகுதியொன்றுக்கு அவர்பற்றி கேள்விப்பட்டிருக்காதவிடத்தும், அவர் காணாமற்போனமை, வட, கிழக்கு மாகாணத்திலான மோதல் அல்லது அதன் பின்நிகழ்வு அல்லது அரசியல் அமைதிக் குலைவு அல்லது குடியியற் குழப்பங்கள் அல்லது வலுக்கட்டாயமான காணாமற்போக்கல் என்பவற்றுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாகவிருக்கு மிடத்தும், அல்லது யுத்தச் செயற்பாட்டில் காணாமற்போனவராக அடையாளங் காணப்பட்ட ஆயுதப்படை உறுப்பினர்களையும் பொலிசையும் (இதனகத்துப் பின்னர் "காணாமற்போன ஆள்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய ஆளின் உறவினரொருவர், அத்தகைய ஆளை காணாமற் போனவராகப் பதிவுசெய்வதற்கும், அத்தகைய ஆள் தொடர்பில் இல்லாமைச் சான்றிதழொன்றைத் தமக்கு வழங்கச் செய்வதற்கும் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் விண்ணப்பிக்கலாம்.

(2) இப்பிரிவின் கீழான ஒவ்வொரு விண்ணப்பமும் பொருளளவில் இச்சட்டத்திற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட படிவம் 'அ' வில் இருத்தல் வேண்டுமெனபதுடன், பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது அத்தகைய காணாமற்போன ஆள் எந்த மாவட்டத்தில் கடைசியாக வதிந்தாரோ அல்லது தனது நிரந்தரமான வதிவிடத்தைக் கொண்டிருந்தாரோ அந்த மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(3) (இதனகத்துப்பின்னர் "உறவினர்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அட்டவணையின் படிவம் 'இ' யின்கீழ் நியமிக்கப்பட்ட உறவினர், காணாமற்போன ஆளினதும் அத்தகைய காணாமற்போன ஆளின் மரணச்சொத்துக்கான அடுத்துறுநர்களினதும் மிகச்சிறந்த அக்கறையைக் கணக்குக்கெடுத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, காணாமற்போன ஆளின் அலுவல்களை நிருவகித்தல் வேண்டும்.

மேலதிக விடயங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

8ஆ. ஒவ்வொரு விண்ணப்பமும் பதிவுசெய்யப்படுவதற்கு நாடப்படும் ஆள் காணாமற் போயுள்ளாரென விண்ணப்பகாரர் நம்புவதற்கான ஏதுக்களை எடுத்துக் கூறவேண்டிய விண்ணப்பகாரரின் சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பமானது, அத்தகைய விண்ணப்பத்துக்கு ஆதாரமான வேறேதேனும் சான்றுடன் சேர்த்து, ஓராண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு அத்தகைய ஆள் காணப்படவில்லை அல்லது ஆள்பற்றிக் கேள்விப்பட்டிருக்கவில்லை என்ற நிகழ்வை உறுதிப்படுத்தி, காணாமற்போனவராக பதிவுசெய்வதற்கு நாடப்படுகின்ற ஆள் எந்தக் கிராம அலுவலர் பிரிவில் வசித்தாரோ அல்லது அவரது நிரந்தரமான வதிவிடத்தைக் கொண்டிருந்தாரோ

அந்தக் கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலரின் அறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

*விண்ணப் பத்தை வெளிக்காட்டி வைத்தல்.*

8இ. இப்பாகத்தின்கீழான விண்ணப்பத்தைப் பெற்றதன்மேல், விடயத்துக்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர், அவரது அலவலகத்திலும் இயைபான கிராம அலுவலரின் அலுவலகத்திலும் வைத்திருக்கப் பட்ட அறிவித்தற் பலகையில் இரண்டு வாரங் களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அத்த கைய விண்ணபத்தின் பிரதியொன்றை வெளிக் காட்டி வைக்கப்படச் செய்வித்தல் வேண்டும்.

*பதிவுக்கான ஆட்சேபனை.*

8ஈ. பிரிவு 8இ இல் ஏற்பாடு செய்யப்பட்டவாறு விண்ணப்பத்தின் பிரதியொன்று எத்தேதியன்று வெளிக்காட்டி வைக்கப்படுகின்றதோ அத்தேதியி லிருந்து ஒரு மாதத்தினுள், அத்தகைய விண்ணப்பம் எவ்வாள் தொடர்பானதோ அத்த கைய ஆளை காணாமற் போனவராகப் பதிவு செய்வதற்கான அல்லது உறவினரின் நியமனத்துக் கான தமது எழுத்திலான ஆட்சேபனைகளை, விடயத்துக்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது மாவட்டப் பதிவாளருக்கு அனுப்பிவைக் கலாம் என்பதுடன், அத்தகைய ஆட்சேபனை, ஆட்சேபனையாளரினதும் வேறெவரேனும் ஆளினதும் ஆட்சேபனைக்கான ஏதுக்களை தெளி வாக எடுத்துக்கூறி அவர்களின் சத்தியக்கடதாசி யின் மூலம் ஆதாரப்படுத்தப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகளுக்கு ஆதாரமான சான்றை அவர்கள் அளித்தலும் வேண்டும்.

*காணாமற்போன ஆட்களைப் பதிவுசெய்தல்.*

8உ.(1) ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு மாத காலப்பகுதி முடிவுறு வதன்மேல், விடயத்துக்கேற்ப, பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர்,

அத்தகைய விண்ணப்பத்துக்கும், ஆட்சேபனைகளுக்கும், எவையேனும் இருப்பின், ஆதாரமாக அளிக்கப்பட்ட சான்றுடன் சேர்த்து விண்ணப்பத்தைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி அல்லது மாவட்டப் பதிவாளர் எவரேனுமாளை வினவலாம் அல்லது ஏதேனும் சான்றைக் கோரலாம் என்பதுடன், அவசியமென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணைகளின் பின்னர், விண்ணப்பத்திற் கூறப்பட்ட விடயத்தின் உண்மை பற்றி திருப்திப்படின், அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிக்கலாம்.

(2) விண்ணப்பமானது பதிவாளர் தலைமையதிபதிக்கு செய்யப்பட்டவிடத்து, 8ஏ என்னும் பிரிவின்கீழான காணாமற்போன ஆட்கள் பற்றிய இடாப்பில் காணாமற்போன ஆளைப் பதிவு செய்யும்படியும் குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக இல்லாமைச் சான்றிதழின் வழங்குகைக்கு அனுமதி மறுக்கப்பட்டாலொழிய, உறவினருக்கு அவரது கைப்பட இல்லாமைச் சான்றிதழொன்றை வழங்கும்படியும் மாவட்டப் பதிவாளரை பணித்து அத்தகைய விசாரணை முடிவுற்றதன் மேல் அவர் கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(3) விண்ணப்பமானது மாவட்டப் பதிவாளருக்குச் செய்யப்பட்டவிடத்து, அத்தகைய விசாரணை முடிவுற்றதன்மேல், அவர் காணாமற்போன ஆள் சம்பந்தமான விபரங்களை எடுத்துக்கூறி அவரது கைப்பட அறிக்கையொன்றைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி அறிக்கையின் உள்ளடக்கங்களை கவனத்துட் கொண்டதன்மேல், 8ஏ என்னும் பிரிவின்கீழான காணாமற்போன ஆட்கள் பற்றிய இடாப்பில் காணாமற்போன

ஆளைப் பதிவுசெய்யும்படியும், குறித்தளிக்கப்பட்ட காரணங்களுக்காக இல்லாமைச் சான்றிதழொன்றின் வழங்குகைக்கு பதிவாளர் தலைமையதிபதி அனுமதி மறுக்கப்பட்டாலொழிய, அதற்காக விண்ணப்பித்த உறவினருக்கு அவரது கைப்பட இல்லாமைச் சான்றிதழொன்றை வழங்கும்படியும் மாவட்டப்பதிவாளரைப் பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) மாவட்டப் பதிவாளர் அதற்கிணங்க அத்தகைய விபரங்களை காணாமற்போன ஆட்கள் பற்றிய இடாப்பில் பதிதல் வேண்டுமென்பதுடன், இதற்கான அட்டவணையின் படிவம் ‘இ’ இல், 8அ என்னும் பிரிவின்கீழ் இல்லாமைச் சான்றிதழுக்காக விண்ணப்பித்த உறவினருக்கு அதனை வழங்குதலும் வேண்டும்.

(5) மாவட்டப் பதிவாளர், பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதற்காக இயைபான பதிவுசெய்யப்பட்ட பதிவின் இணைப்பிரதியை உடனடியாக அனுப்பிவைத்தல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி, அவசியமாயின், 8ஊ என்னும் பிரிவின்கீழ் மாவட்ட நீதிமன்றத்தின் பரிசீலனைக்கமைய, 8ஏ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்புகளுக்கு அவசியமான பதிவுகளை உடனடியாக சேர்த்தல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட பதிவானது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

திருப்திப்படாவிடின் மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல்.

8ஊ. பிரிவு 8உ இன்கீழான இல்லாமைச் சான்றிதழை தமக்கு வழங்குவதற்கு மறுக்கின்ற பதிவாளர் தலைமையதிபதியின் முடிபில் அதிருப்தியடைகின்ற விண்ணப்பகாரரொருவர், அல்லது இப்பாகத்தின்கீழான இல்லாமைச்

சான்றிதழ் வழங்கப்படுவதற்கெதிராக 8ஈ என்னும் பிரிவின் கீழ் ஆட்சேபனை தெரிவித்துள்ள ஆளொருவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய மறுப்பு அல்லது வழங்குகை பற்றிய அறிவிப்பிலிருந்து ஒருமாதத்தினுள், அத்தகைய மறுப்பு அல்லது வழங்குகைக்கெதிராக மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யலாம். மாவட்ட நீதிமன்றம் அதன் முன்னருள்ள விடயத்தைப் பரிசீலனை செய்தபின்னர், ஒன்றில் பதிவாளர் தலைமையதிபதியின் முடிபை உறுதிப்படுத்தலாம் அல்லது தள்ளிவைக்கலாம் என்பதுடன் விடயத்துக்கேற்ப, இல்லாமைச் சான்றிதழை வழங்கும்படி அல்லது உறவினரின் விண்ணப்பத்தை அனுமதிக்கும்படி பதிவாளர் தலைமையதிபதியினை பணிக்கலாம்.

விசாரணை ஆணைக்குழுவொன்றினால் அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்றினால் அல்லது காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் காணாமற்போன எவ்வாட்கள் தொடர்பில் முடிவெடுப்புக்கள் செய்யப்படுகின்றனவோ அவ்வாட்களைப் பதிவுசெய்தல் தொடர்பான விசேட நடவடிக்கை முறை.

8எ. (1) (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்று அல்லது 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, விசேட சனாதிபதி ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று அல்லது 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகம், ஆளொருவர் மறைந்து போயுள்ளார் அல்லது காணாமற்போயுள்ளார் எனக் காணுமிடத்து, அவ்வாளின் உறவினர், அக்காணாமற்போன ஆள்தொடர்பில் இல்லாமைச் சான்றிதழொன்றைத் தமக்கு வழங்கும்படி, பொருளளவில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் “ஆ” இல் பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது அவ்வாள் எம்மாவட்டத்தில் கடைசியாக வசித்தாரோ அல்லது அவரது

நிரந்தரமான வதிவிடத்தைக் கொண்டிருந்தாரோ அம்மாவட்டத்தின் மாவட்டப் பதிவாளருக்கு விண்ணப்பிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் 8ஆ என்னும் பிரிவின் நியதிகளின் படி விண்ணப்பகாரரின் சத்தியக்கடதாசியொன்றுடனும், அத்தகைய காணாமற்போன ஆள் தொடர்பாக விடயத்துக்கேற்ப, விசாரணை ஆணைக்குழுவின் அல்லது விசேட சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முடிவெடுப்புக்களினதும் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றுடனும் அல்லது காணாமற்போன ஆட்கள்பற்றிய அலுவலகத்தின் இடைக்கால அறிக்கையுடனும் அல்லது அறிக்கையுடனும் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், மாவட்டப் பதிவாளர், இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் முரணாக எது எவ்வாறிருப்பினும், காணாமற்போன ஆளின் விபரங்களை எடுத்துக்கூறி தமது கைப்பட அறிக்கையொன்றைப் பதிவாளர் தலைமையதிபதிக்கு உடனடியாக அனுப்புதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான அறிக்கையைப் பெற்றதன்மேல், பதிவாளர் தலைமையதிபதி, அறிக்கையின் உள்ளடக்கங்களைக் கவனத்துட்கொண்டபின்னர், காணாமற்போன ஆட்கள் பற்றிய இடாப்பில் காணாமற்போன ஆளைப் பதிவுசெய்யும்படியும் இல்லாமைச் சான்றிதழுக்காக விண்ணப்பித்த உறவினருக்கு அவரது கைப்பட அச்சான்றிதழை 8உ என்னும் பிரிவின்கீழ் வழங்கும்படியும் மாவட்டப் பதிவாளரைப் பணிக்கின்ற கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(4) மாவட்டப்பதிவாளர், அதற்கிணங்க, 8ஏ என்னும் பிரிவின் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய விபரங்களை காணாமற்போன ஆட்கள்பற்றிய இடாப்பில் பதிதல் வேண்டும்.

(5) மாவட்டப்பதிவாளர், உடனடியாக, இயைபான பதிவுசெய்யப்பட்ட பதிவின் இணைப் பிரதியை (2)ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட கட்டளையுடன் சேர்த்து, பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுவதற்காக அனுப்பி வைத்தல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதி, உடனடியாக, 8ஏ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பேணப்பட்ட இடாப்பில் அவசியமான பதிவுகளைச் சேர்த்தல் வேண்டும். பதிவாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட பதிவுசெய்யப்பட்ட பதிவு இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக இறுதியானதும் முடிவானதுமாக விருத்தல் வேண்டும்.

காணாமற்போன ஆட்கள்பற்றிய இடாப்பு.

8ஏ. (1) பதிவாளர் தலைமையதிபதி, காணாமற்போன ஆட்கள்பற்றிய இடாப்பொன்றை இலத்திரனியல் முறையில் பேணுதல் வேண்டும். பதிவுசெய்யப்படுவதற்கான தகவல்கள், காணாமற்போன ஆளின் பெயர் அடிப்படையிலும் இயன்றவிடத்து, காணாமற்போன ஆளின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தின் அடிப்படையிலும் பதியப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மாவட்டப்பதிவாளரும் காணாமற்போன ஆட்கள்பற்றிய இடாப்பொன்றையும் பேணுதல் வேண்டுமென்பதுடன், பதிவாளர் தலைமையதிபதியினால் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பதிவுகளைச் செய்தலும் வேண்டும்.

(3) மாவட்டப்பதிவாளரினால் செய்யப்பட்ட ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட பதிவும் -

(அ) பதிவாளர் தலைமையதிபதிக்கு அல்லது மாவட்டப் பதிவாளருக்கு எந்நேரக்கிரமப் படி விபரங்கள் அளிக்கப்பட்டனவோ அந்நேரக்கிரமப்படி செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) தொடர்ச்சியாக இலக்கமிடப்பட்டு பதிவைச் செய்கின்ற அலுவலரினால் கையொப்ப மிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) முப்பிரதிகளில் தயாரிக்கப்படுதல் வேண் டும். மூலப்பிரதி மாவட்டப்பதிவாளரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும், (இதன கத்துப்பின்னர் "இணைப்பிரதி" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இரண்டாவது பிரதி பதிவாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். (இதன கத்துப்பின்னர் "இல்லாமைச்சான்றிதழ்" எனக்குறிப்பீடு செய்யப்படும்) மூன்றாவது பிரதி, மாவட்டப்பதிவாளரின் கைப்பட முறையாகப் புறக்குறிப்பிடப்பட்டு அதற்காக விண்ணப்பித்த உறவினருக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

பிழைகளைத் திருத்துதல்.

8ஐ. ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட பதிவிலான விட்டுவிடுகையுட்பட, ஏதேனும் பிழையைத் திருத்துதல் தொடர்பான (110ஆம் அத்தியாய மான) பிறப்புகள் இறப்புகள் பதிவுச் சட்டத்தின் பாகம் VI இல் உள்ள ஏற்பாடுகள், இப்பாகத் தின்கீழ் செய்யப்பட்ட பதிவுகளுக்கு ஏற்றமாற்றங்க ளுடன் ஏற்புடையற்பாலனவாதல் வேண்டும்.

இல்லாமைச் சான்றிதழின் ஏற்புடைமை.

8ஒ. (1) இல்லாமைச் சான்றிதழானது, அதற்காக விண்ணப்பித்த காணாமற்போன ஆளின் உறவினரினால் பின்வருவனவற்றுக்கெனப் பயன்படுத்தலாம்:-

(அ) ஏதேனும் சமூக சேமநலத் திட்டத்தின் கீழான நன்மைகளுக்காக விண்ணப்பிப்பதற்கு;

(ஆ) (i) காணாமற்போன ஆளின் ஆதனங்களையும் சொத்துக்களையும் மாவட்ட நீதிமன்றத்தின் மேற்பார்வையின்கீழ் தற்காலிகமாக முகாமைசெய்வதற்கும் காணாமற்போன ஆளில் தங்கிவாழும் பிள்ளைகளுக்காக வேளைக்கடுத்த பாதுகாவலராகச் செயலாற்றுவதற்கும்;

(ii) விடயம் (i) இன் கீழான விண்ணப்பம், சம்பந்தப்பட்ட ஆதனங்கள் தொடர்பில் அல்லது தங்கிவாழும் பிள்ளைகள் வதிகின்ற இடத்தின்மீது ஆள் புலநியாயாதிக்கங்கொண்ட மாவட்ட நீதிமன்றத்துக்குச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், சுருக்க நடவடிக்கைமுறை மூலம் பின்வரும் விதமாக கையாளப்படுதலும் வேண்டும்:-

(அ) காணாமற்போன ஆளின் ஆதனங்களையும் ஏனைய சொத்துக்களையும் நிருவகித்தல் பற்றிய கருமங்கள், மாவட்ட நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்த தேதியிலிருந்து நான்கு மாதங்களினுள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பிள்ளையின் காப்பாண்மை பற்றிய கருமங்கள், இருபெற்றோரும் காணாமற்போன விடத்து அல்லது உயிரோடிருக்கும் பெற்றோர் பிள்ளையின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கு இயலாதவராகவுள்ள விடத்து ஒரு மாதத்தினுள் முடிவுறுத்தப்படுதல் வேண்டும்;

(இ) காணாமற்போன ஆளின் மரணச்சொத்து சார்பில் நிறைவேற்று, நிருவாக மற்றும் நீதி முறை அதிகாரிகளுக்கு முன்னர் முறையீடுகளைச் செய்வதற்கும்.

(2) எல்லா நிறுவனங்களும் அதிகாரங்கொண்டுள்ள ஆட்களும் காணாமற்போன ஆளின் நிலைமைக்கான எண்பிப்பாக இல்லாமைச் சான்றிதழை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(3) (அ) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட ஒரு விடயம் தொடர்பில் எழுகின்ற ஏதேனும்பிணக்கு, பிரிவின் பிரதேசச் செயலாளருக்கு உறவினரால் ஆற்றுப்படுத்தப்படலாம்.

(ஆ) பிரதேசச் செயலாளர், பிணக்கிலுள்ள கருமத்தை இயைபான நிறுவனத்துடன் கலந்தாராய்ந்தபின்னர், விண்ணப்பத்தைப் பெற்றதிலிருந்து பத்து வேலை நாட்களினுள் தீர்மானத்தைச் செய்தல் வேண்டும்.

(இ) மாவட்டச் செயலாளரின் தீர்மானம் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் மீது முடிவானதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

நடைமுறைக் காலப்பகுதி.

8ஓ. (1) இல்லாமைச் சான்றிதழ், அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகாலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும்-

(அ) காணாமற்போன ஆளின் எச்சங்கள் மீட்டெடுக்கப்படின் அல்லது காணாமற்போன ஆளின் இறப்புத்தொடர்பான வேறு முடிவான சான்று கண்டெடுக்கப்படின், அத்தகைய சந்தர்ப்பங்களில் இல்லாமைச் சான்றிதழ் வெற்றானதாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் 6ஆம் பிரிவின்கீழான இறப்புச் சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும்;

(ஆ) காணாமற்போன ஆள் உயிரோடிருக்கின்றாரெனக் காணப்படின், 13ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். மாவட்டப்பதிவாளர், அதற்கிணங்க, பதிவை இல்லாதாக்குவதற்கும் இல்லாமைச் சான்றிதழை அழிப்பதற்கும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(2) இரண்டாண்டு காலப்பகுதி முடிவுற்றதன் மேல், மாவட்டப்பதிவாளர், காணாமற்போன ஆளின் நிலைமைபற்றி இல்லாமைச் சான்றிதழ் வழங்கப்பட்ட உறவினரிடம் விசாரித்தல் வேண்டுமென்பதுடன், 1ஆம் பிரிவின் (2)(அ) என்னும் உட்பிரிவுக்கமைய, ஒன்றில்,-

(i) பிரிவு 8அ இன் (1)(ஆ) என்னும் உட்பிரிவுக்கமைய, புறக்குறிப்பின் மூலம் மேலும் இரண்டாண்டுகளுக்கு இல்லாமைச் சான்றிதழின் காலப்பகுதியை நீடிக்கலாம்;

(ii) இறப்புச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க விரும்பின், 2ஆம் பிரிவின்கீழான ஒரு விண்ணப்பத்தைச் செய்யும்படி உறவினரைப் பணிக்கலாம் என்பதுடன் பதிவை இல்லாதாக்குவதற்கும் இல்லாமைச் சான்றிதழை அழிப்பதற்குமான நடவடிக்கையை எடுக்கலாம்; அல்லது

(iii) இல்லாமைச் சான்றிதழின் காலப்பகுதியை நீடிப்பதற்கு உறவினர் உட்கருதாத விடத்து சொல்லப்பட்ட சான்றிதழை இல்லாதாக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**11.** முதன்மைச்சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவு, "இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவம் 'அ' இல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

*"ஐயத்தைத் தவிர்த்தல்.*

14. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக இத்தாற் பின்வருமாறு வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) 1ஆம் பிரிவின் (2) ஆம் பிரிவின் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதி முடிவுற்றதன்மேல் பாகங்கள் I மற்றும் Iஅ என்பவற்றின் நடைமுறையானது

காலாவதியாகப் போயிருந்தால் மற்றும் அவ்வுட்பிரிவுகளின் நியதிகளின்படி பாகங்கள் I அத்துடன் Iஅ என்பவற்றின் நடைமுறைக் காலப்பகுதியை நீடிப்பதற்கான கட்டளையெதுவும் ஆக்கப்பட்டிராவிட்டால்; அத்துடன்

(ஆ) முறையே இறப்புச் சான்றிதழொன்றை அல்லது இல்லாமைச் சான்றிதழொன்றை வழங்குவதற்கான விண்ணப்பமொன்று, பாகம் I அல்லது பாகம் Iஅ என்பவற்றின் நடைமுறைக் காலப்பகுதி காலாவதியாவதற்கு முன்னர் இச்சட்டத்தின் 2, 8, 8அ, 10, 11 ஆகிய பிரிவுகளின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி செய்யப்பட்டிருந்தால்,

பதிவாளர் தலைமையதிபதி அத்தகைய ஆளின் இறப்பைப் பதிவுசெய்வதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுக்கலாம் அல்லது அத்தகைய ஆளைக் காணாமற்போனவராகப் பதிவுசெய்து முறையே இச்சட்டத்தின் பாகம் I மற்றும் Iஅ என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி இறப்புச் சான்றிதழை அல்லது இல்லாமைச் சான்றிதழை வழங்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**13**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலம்:-

"(ஈ) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைப் பின்பற்றி காணாமற்போனவராகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஆளொருவர் உயிரோடிருக்கின்றாரென அறிந்துகொண்டு, அத்தகைய

தகவலைப் பதிவாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவத் தவறுகின்றாரோ; அல்லது

(உ) இல்லாமைச் சான்றிதழொன்றிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் உயிரோடிருக்கின்றாரென அறிந்து கொண்டு அல்லது நம்புவதற்குக் காரணமுடையவராகவிருந்துகொண்டு இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட இல்லாமைச் சான்றிதழொன்றை நேர்மையீனமாக அல்லது மோசடியான முறையில் பயன்படுத்துகின்றாரோ;";

(2) "ஐந்தாண்டுகளை விஞ்சாதவொரு காலத்திற்கு மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றினால் அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான மறியற்றண்டனையினால் தண்டனைத்தீர்ப்பளிக்கப்படுதலும் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**14**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு, "மாவட்டப் பதிவாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணங்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"அமைச்சர்" என்பது, பதிவாளர் தலைமையதிபதியின் திணைக்களம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சர் என்று பொருளாகும்;

"உறவினர்" என்பது, காணாமற்போன ஆளொருவர் தொடர்பாகப் பின்வரும் ஆட்களை உள்ளடக்குதல் வேண்டும்:-

(i) வாழ்க்கைத்துணை;

(ii) மகவேற்கப்பட்ட பிள்ளைகள், திருமணம்புறத்த பிள்ளைகள், மறுதாரப் பிள்ளைகள்;

(iii) பெற்றோர் (ஒன்றுவிட்ட தாய், ஒன்றுவிட்ட தகப்பன், மகவேற்பவர் உட்பட);

(iv) இரத்த அல்லது அரை இரத்தச் சகோதரர் அல்லது சகோதரிகள் அல்லது மகவேற்கப்பட்ட சகோதரர்கள் அல்லது சகோதரிகள்;

(v) மாமன் மாமி, மச்சான் /மச்சாள், மருமகன்மார்/ மருமகள்மார்;

(vi) பேரப்பிள்ளைகளும் பாட்டன் பாட்டிகளும்.

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையைத் திருத்துதல்.*

**15**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணை இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) ''அட்டவணை'' என்னும் சொல்லை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம்:-

**"படிவம் அ"**

(2) படிவம் 'அ' வை உடனடுத்துப் பின்வரும் புதிய படிவங்களை உட்புகுத்துவதன் மூலம் :-

**"படிவம் ஆ** [பிரிவு 8அ(2)]

**காணாமற்போன ஆளொருவரைப் பதிவுசெய்வதற்கும் இல்லாமைச் சான்றிதழொன்றை வழங்கப்பெறுவதற்குமான விண்ணப்பம்**

(1) காணாமற்போன ஆளின் முழுப்பெயர்:

(2) பாலும் இனமும்:

(3) பிறந்த தேதி:

(4) கடைசியாகக் கண்ட தேதி (ஏறத்தாழ):

(5) கடைசியாக அறியப்பட்ட வதிவிட முகவரி:

(6) நிரந்தரமான வதிவிட முகவரி:

(7) உறவினராக விண்ணப்பிக்கும் ஆளின் முழுப்பெயரும் வதிவிடமும்:

(8) காணாமற்போன ஆளின் உறவினராக விண்ணப்பிக்கும் ஆளின் உறவுமுறை:

(9) காணாமற்போன ஆளின் பின்வருவோரினது முழுப் பெயர்:-

தகப்பன்
தாய்
வாழ்க்கைத்துணை
தங்கிவாழுநர்கள்

..............................என்னுமிடத்தைச் சேர்ந்த............................ ஆகிய நான், சொல்லப்பட்ட............................(காணாமற்போன ஆளின் பெயர்) ஓராண்டுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு காணாமற்போயுள்ளாரென இத்தாற் கூறுகின்றேன்.

ஆதலால் சொல்லப்பட்ட............................( காணாமற்போன ஆளின் பெயர்) 2010 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இறப்புக்களினதும் காணாமற்போன ஆட்களினதும் பதிவு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் உள்நாட்டு மோதல் காரணமாகக் காணாமற்போன ஆளொருவராகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்றும் அத்தகைய ஆள்தொடர்பில் இல்லாமைச் சான்றிதழொன்று உறவினரென்றமுறையில் எனக்கு வழங்கப்படுதல் வேண்டுமென்றும் கோருகின்றேன்.

காணாமற்போனவரென அறிக்கையிடப்பட்ட ஆள் உயிரோடிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது காணாமற்போன ஆளின் இறப்புப்பற்றிய சான்றைப் பெறுவதன்மேல் நான் உடனடியாகப் பதிவாளர் தலைமையதிபதிக்கு அறிவிப்பேன்.

| | |
|---|---|
| | ................................ |
| ............................ | விண்ணப்பகாரரின் |
| தேதி | கையொப்பம் |

*படிவம் இ (பிரிவுகள் 8அ, 8உ மற்றும் 8ஏ)*

*பதிவாளர் தலைமையதிபதித் திணைக்களம்*

**இல்லாமைச் சான்றிதழ்**

இலக்கம்............................மாவட்டம் ............................ பிரிவு .............................கீழே குறிப்பிடப்பட்ட ஆள் காணாமற் போயுள்ளாரென்று ............................ என்னுமிடத்தைச் சேர்ந்த ............................. என்பவரிடமிருந்து இன்று அறிவித்தல் பெற்றுள்ளேன் என்பதுடன் பின்வரும் தகவலையும் இத்தாற் பதிவுசெய்கின்றேன்:-

(1) காணாமற்போன ஆளின் முழுப்பெயர்:-
(2) கடைசியாகக் கண்ட தேதியும் இடமும்:-
(3) பால்:-
(4) இனம்:-
(5) இருந்திருப்பின் ஆளின் வயது:-
(6) பதவிவரிசை அல்லது உயர்தொழில்:-
(9) காணாமற்போன ஆளின் பின்வருவோரினது முழுப் பெயர்:-

தகப்பன்
தாய்
வாழ்க்கைத்துணை
தங்கிவாழுநர்கள்

............................. இலிருந்து.............................வரையிலான இரண்டாண்டுகாலப்பகுதிக்கு இச்சான்றிதழ் செல்லுபடியாதல் வேண்டும்.

............................ ............................

தேதி பதிவாளர்

**காணாமற்போன ஆளின் அலுவல்களை நிருவகிப்பதற்கு நியமிக்கப்பட்ட உறவினர்**

....................................... (உறவுமுறை) எனும் முறையில் ............................ என்னுமிடத்தைச் சேர்ந்த,............................ (பெயர்) (தேஅஅஇல.) ................................ கொண்டவருமான என்பவர்

உறவினரின் கையொப்பம் ...............................

மு.கு ஏதேனும் சமூக சேமநலத்திட்டத்தின்கீழான நன்மைகளுக்காக விண்ணப்பிக்கும் போதும் காணாமற்போன ஆளினதும் அத்தகைய மரணச்சொத்தினதும் சார்பில் நிறைவேற்று, நிருவாக மற்றும் நீதிமுறை அதிகாரிகளின் முன்னர் முறையீடுகளைச் செய்யும்போதும் காணாமற்போன ஆளின் நிலைமைக்கான எண்பிப்பாக இல்லாமைச் சான்றிதழை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும்படி எல்லா நிறுவனங்களையும் அதிகாரங் கொண்ட ஆட்களையும் 2010ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இறப்புக்களினதும் காணாமற்போன ஆட்களினதும் பதிவு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஒ(2)ஆம் பிரிவு தேவைப்படுத்துகின்றது.

**16**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்